சிரமப்படுகிருர்கள். ஒப்பந்தப் புள்ளி பலர் கேட்டாலும் கேட்காவிட்டாலும் ஒன்றிய நிதியிலிருந்தே இந்த கிணற்றை வெட்டித்தர அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: காலதாமதமாவதற்குக் காரணம் டெண்டர்கள் கோரப்பட்டும் ஒரே ஒருவர்தான் டெண்டர் கேட்டிருக்கிருர் என்ற காரணத்தினுலேதான். மாண்புமிகு உறுப்பினரின் தொகுதியில் இது இருப்பதால் அவர் பல டெண்டர்கள் வருவதற்கு ஏற்பாடு செய்வார் என்று நம்புகிறேன்.

மணி அய்யனர் கோயில், முருகமங்கலம்

*299 வின—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு அறநிலேயத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மாயூரம் முருகமங்கலம் பகுதியிலுள்ள அருள்மிகு மணி அய்யனர் கோயிலே அறநிலேயத் துறையின் கட்டுப்பாட்டின கீழ் எடுத்துக்கொள்ள நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதா?

(இ) ஆமெனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: (அ) & (இ) மாயூரம் வட்டம், முருகமங்கலம் அருள்திரு ஸ்ரீ மணி அய்யனர் திருக்கொயில் 1974 ஆம் ஆண்டில் சமய அறநிலேய ஆட்சித் துறையின் கீழ்க் கொண்டு வரப்பட்டுள்ளது. பரம்பரை அல்லாத அறங்காவலர் நியமிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

வீதிவிடங்கன் கிராமத்தில் கண்டுபிடிக்கப்பட்ட சிலேகள்

*300 வின—திரு. எஸ். வடிவேல்: மாண்புமிகு அறநிலேயத் துறை அமைச்சர் 13—3—1973 அன்று குறுகிய கால வின எண். 3-க்கு அளித்த விடையையொட்டி, தயவு செய்து கீழ்க்கண்ட வினக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சை மாவட்டம், நன்னிலம் தாலுகா வீதிவிடங்கன் கிராமத்தில், புதையலாகக் கண்டுபிடிக்கப்பட்ட சிலேகள் பற்றிய வழக்கு முடிவடைந்துவிட்டதா?

(இ) ஆமெனில், அதன்மீது எடுக்கப்பட்டுள்ள தொடர் நடவடிக்கை என்ன?

1975 நவம்பர் 11]

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. எஸ். வடிவேல்: தலைவர் அவர்களே, இந்த வீதிவிடங்கன் கிராமத்தில் சிலைகள் கண்டுபிடிக்கப்பட்டு வெள்ளைக்காரன் காலத்திலேயே ஒப்படைக்கப்பட்டு பணமும் வாங்கிக் கொண்டிருக்கிறார்கள். இந்தச் சிலைகள் எத்தனை லட்சம் ரூபாய் பெறுமானமுள்ளவை? அவை எல்லாம் எலிவேட்டையின்போது கிடைத்த சிலைகள். ஆகவே, அவற்றைக் கண்டுபிடித்து எடுத்துக் கொடுத்த அந்த அரிசனங்களுக்குச் சன்மானம் கொடுக்கப்படுமா?

(முற்பகல் 10.00)

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: தலைவரவர்களே, இந்தச் சிலை 1974 ஆம் ஆண்டில் வீதிவிடங்கன் கிராமத்தில் சாமிநாத சாம்பான் என்பவரால் கண்டுபிடிக்கப்பட்டது. இந்தச் சிலை யாருக்கு உரிமை என்பதைக் குறித்து தஞ்சை மாவட்ட முன்சீப் நீதிமன்றத்தில் வழக்கு நடைபெற்று வருகிறது. அது முடிந்த பிறகுதான் முடிவுகள் மேற்கொள்ளப்படும்.

பச்சூர் சென்றாயசாமி கோயில்

*301 வினா—**திரு. டி. சி. திம்மராய கவுண்டர்:** மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

வடார்க்காடு மாவட்டம், திருப்பத்தூர் வட்டம், பச்சூர் சென்றாயசாமி கோயிலை அறநிலையத் துறையின் கீழ்க் கொண்டு வரும் செயற்குறிப்பு ஏதும் பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: இத்திருக்கோயில் ஏற்கனவே இந்து சமய அறநிலைய ஆட்சித் துறையின் கீழ் உள்ளது.